**தலைப்பு 266 - மாவட்டச் செயலகம், வவுனியா**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வவுனியா மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வவுனியா மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2020 மே 30 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 21 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதியிடப்பட்ட 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வவுனியா மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை வடிவமைத்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் மாவட்டச்செயலகத்தில் வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை உரிய வகையில் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டுச்சேரல், தவறான

ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள் கட்டுப்பாட்டின் செயல்திறன தொடர்பாக ஒரு கருத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை என்றாலும், அவ்வப்போது பொருத்தமான கணக்காய்வ நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடு குறித்த அபிப்பிராயம் பெறப்பட்டிருந்தது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இவ் அறிக்கையின் 1.6.2 (அ) மற்றும் (ஆ) பந்திகளில் உள்ள அவதானிப்புகள் தொடர்பாக முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கைளில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிநிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் ஆதனம், பொறி, இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,579,055,053 காட்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அச்சுப் பதிவேட்டின் படி பெறுமதி ரூபா 1,576,746,739 ஆக காணப்பட்டிருந்ததினால் இவற்றுக்கிடையிலான வேறுபாடாக ரூபா.2,308,314 பெறுமதியானது அவதானிக்கப்பட்டிருந்தன. | திணைக்களங்களின் பதிவேட்டிற்கும் மற்றும் திறைசேரி அச்சுப் பதிவேட்டிற்கும் அமைய மீதிகள் சமமானதாக காணப்பட வேண்டும். | திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சொத்துக்களினை விற்பனை செய்தததன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபா.166,450 பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சொத்து விற்பனையிலிருந்து வரும் காசானது காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலாக கணக்கிடப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சரியான குறிப்புக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.. |
| (ஆ) | மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகளிலிருந்து பெறப்பட்ட வட்டி ரூபா 2,533,523 பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குக்கான வட்டியானது காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சலாக கணக்கிடப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகளில் சரியான குறிப்புக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.. |

### 1.6.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணக்காய்வு ஐயவினாவிற்கமைய எதிர்காலத்தில் சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. | | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானதன் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் கால கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தல் வேண்டிய போதிலும், இவ் அறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்குவதில் தாமதம் காணப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். | -மேலே குறிப்பிட்டதன் படி- |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் தொடர்பு | இணங்காமைகள் | | |
| 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 09/2009 இன் 2.1 ஆவது பிரிவு | நிறுவனத் தலைவர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களும் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் தங்கள் பணியிடத்திற்கு வருகைதருவதினையும் பணியிலிருந்த வெளியேறியதனையும் உறுதிப்படுத்த வேண்டியிருந்தாலும், வவுனியா மாவட்டச் செயலாளர் அலுவலக கைவிரல் அடையாள இயந்திரத்தின் வருகைதருவதையும் வெளியேறுவதும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை விதிகள் பின்பற்றப்பட வேண்டும் | ஏனைய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் கைவிரல் அடையாள இயந்திரத்தினை பயன்படுத்துவதில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 266-1-1-0-2103/11 செலவின விடயத்திற்கான ஒதுக்கீட்டிருந்ததுடன் தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 1,000,000 பெறுமதியானது சேமிக்கப்பட்டிருந்தன. | சந்தர்ப்பங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகள் 04/2019 மற்றும் 05/2019 ஆகியவற்றின் பிரகாரம் சேமிப்புக்கள் செய்யப்பட்டுள்ளது. |

## 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பணியகத்தின் ஒதுக்கீட்டில் இருந்து ரூபா.4,130,000 பெறுமதியானது செலவிடப்பட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரதேசத்தில் 2017 திசெம்பர் 27 ஆம் திகதியில் நிர்மாணவேலைகள் நிறைவடைந்திருந்த பழங்கள் பதப்படுத்தும் தொழில்சாலைக்கான 2018 திசெம்பர் 31 திகதியில் இயந்திரங்கள் ரூபா.8,096,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2020 யூன் 30 திகதி வரையிலும் பழங்கள் பதப்படுத்துவதற்கான தொழில்சாலைக் கட்டடங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவில்லை. | புழங்கள் பதப்படுத்தும் தொழில்சாலைக் கட்டடத்தைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கட்டடமானது வேறு நோக்கத்திற்கு பயன்படுத்தப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கான சரியான செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனபதுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கைக்கு ஏற்ப முறையான செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | அமைச்சினால் அனுப்பிய மாதிரிப் படிவத்திற்கமைய செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கமைய நிறுவனத்தின் நிறுவன கட்டமைப்புக்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கமைய நிறுவனத்தின் நிறுவன கட்டமைப்புக்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு ஐயவினாவிற்கமைய ஒரு செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்கள் பற்றியும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்கள் பற்றியும் மீளாய்வு செய்யப்பட்ட வேண்டும். | -மேலே குறிப்பிட்டதன் படி- |
| (இ) | வருடாந்த பாதீட்டின் அடிப்படையில் முன்னுரிமை செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டின் அடிப்படையில் முன்னுரிமை செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிக்கப்பட்ட வேண்டும். | -மேலே குறிப்பிட்டதன் படி- |
| (ஈ) | செயல் நடவடிக்கைகளின் விளைவுகள்/ எதிர்பார்க்கப்பட்ட செயல்பாட்டின் வெளியீடுகள் அடையப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைகளின் விளைவுகள்/ எதிர்பார்க்கப்பட்ட செயல்பாட்டின் வெளியீடுகள் அடையப்பட்டவை என்பன சுட்டிக்காட்டப்பட வேண்டும். | -மேலே குறிப்பிட்டதன் படி- |
| (உ) | வருடாந்த செயல்நடவடிக்கைக்கான பணத்தேவைப்பாட்டிற்கான திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைக்கான பணத்தேவைப்பாட்டிற்கான திட்டமானது தயாரிக்கப்பட வேண்டும். | -மேலே குறிப்பிட்டதன் படி- |

## 3.2 உள்நாட்டு நிதியில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அலுவலகக் கட்டடத்தின் கட்டட வேலைகளின் ஒரு பகுதியானது 2019 ஆம் ஆண்டில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. 30 ஒக்டோபர் 2019 ஆம் திகதியில் கணக்காய்வு பரிசோதனையின் போது முதலாம் கட்டத்திற்காக ரூபா.1,946,738 பெறுமதியானது செலவிடப்பட்டிருந்தது. இரண்டாம் கட்ட வேலைக்காக ரூபா 5,135,600 செலவிடப்பட்ட வருகின்றது. என்பதுடன் இது தொடர்பாக மேற்கொள்ள்ப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு. | | |
| (அ) | இந்த கட்டடத்திற்கான ஒட்டுமொத்த கட்டுமான வேலைக்குமான மொத்த செலவினத்தினையும் உள்ளடக்கிய ஒரு பொறியியல் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டும் மற்றும் கட்டடத்திற்கான ஒரு திட்டமானதும் (Building design including Lay out, Structural drawings, Services, Finishing schedules etc.) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுமானத்திற்கு தேவையான அனைத்து ஆரம்ப திட்டங்களும் முறையாக தயாரிக்கப்பட வேண்டும். | தேவையான மனித வளங்களை ஆட்சேர்ப்பு செய்த பின்னர சீர்செய்யப்படும். |
| (ஆ) | இக்கட்டடத்திற்கான கட்டுமான வேலைகள் ஒரே கட்டத்தில் மேற்கொள்ளப்படாமல் இரண்டு கட்டங்களாக கட்டுமான வேலைகளை மேற்கொள்ளப்பட்டாமையினால் இரண்டாம் கட்டத்திற்கான ஆரம்ப செலவாக ரூபா.150,000 மேலதிகமாக செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | அரச நிதியானது மிகவும் வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தப்பட வேண்டும். | ஒதுக்கீடுகள் இரண்டு தடவைகளாக பெறப்பட்டிருந்ததினால் இரண்டு தடவை பெறுகைகள் கோரப்பட்டிருந்தன. |
| (இ) | ஒப்பந்ததின் பிரகாரம், கட்டத்திற்கான கட்டுமான வேலைக்கான முதல் கட்டத்திற்கு 5 சதவீததினை விட கூடுதலாக அறவிடப்பட்ட காப்புறுதி செலவினம் ரூபா 19,986 ஆன | விலை மற்றும் கணிய அளவீட்டுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு முறைகளின் நிபந்தனை | பிடிப்பணத்தில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணமானது செலுத்தப்படாமல் பொறியியல் மதிப்பீட்டாக ரூபா 29,020 பெறுமதி ஒதுக்கப்பட்டதுடன் அதற்கான மொத்த கொடுப்பனவ மேலாக ரூபா 9,034 பெறுமதியானது செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. | மற்றும் விதிமுறைகளுக்கமைய காப்புறுதிப் பெறுமதியினை மீளப்பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | |
| (ஈ) | கட்டடத்தின் முதலாம் கட்ட வேலைக்கான ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சிரேஸ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தரிற்கான 04 மாதங்களுக்கான கொடுப்பனவு ரூபா 32,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. | மேலதிகக் கொடுப்பனவுகள் மீள அறவிடப்பட வேண்டும். | பிடிப்பணத்தில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். |
| (உ) | கட்டடத்தின் வெளிப்புறத்தில் மற்றொரு பகுதியை சேர்த்து Slab மற்றும் Beam ஆன கம்பிகள் திறந்து விடப்பட்டிருந்தன. இதனால் அக்கம்பிகள் துருப்பிடித்து அழிந்து போகும் அபாயம் காணப்படுகின்றது. | அரச நிதியானது அதிகூடிய வினைத்திறன் மற்றும் விளைதிறனுடன் முகாமை செய்யப்பட வேண்டும். | பிரதேச செயவாளரின் கோரிக்கைக்கமைய மாற்றி அமைக்கப்பட்டது. |
| (ஊ) | கட்டடத்தின் இரண்டாம் கட்ட கட்டுமானத்திற்கான திட்டங்களின்படி கட்டடத்திற்கான Beam இற்காக 10 மில்லிமீட்டர் கம்பிகளை பயன்படுத்துவதற்கு ரூபா.19,840 பெறுமதியானது செலுத்தப்பட்டிருந்ததுடன் நேரடி களப்பரிசோதனையின் போதான மதிப்பீட்டின் போது 10 மில்லிமீட்டர் கம்பிகள் Beam இற்கு பயன்படுத்தப்படவில்லை என்பது அறியப்பட்டது. | மேலதிகக் கொடுப்பனவுகள் மீள அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டும். | இறதிக் கொடுப்பனவில் திருத்தம் செய்யப்படும். |
| (எ) | கட்டுமானப் வேலைகளுக்கான முதல் மற்றும் இரண்டாம் கட்ட வேலைகளுக்கான பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரிப்பதில், A1, A2, A3, A4, A5, A6, A7 மற்றும் A8 ஆகிய வேலைப் பொருட்களுக்கான செலவைக் கணக்கிட ஒரு திட்டவட்டமான மற்றும் சீரான அடிப்படை பின்பற்றப்படவில்லை. அதன்படி, காப்புறுதி, செயல்திறன் காப்புறுதி, தற்காலிக கட்டிடங்களை நிர்மாணித்தல், நீர் மற்றும் மின்சாரம் மற்றும் தொழில்நுட்ப | விலை விகிதங்களுக்கேற்ப ஒரு சீரான அடிப்படைகள் பின்பற்றப்பட வேண்டும். | மீள் மதிப்பீட்டில் இவ் பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

பணியாளர்களுக்கான செலவினங்களின் மதிப்பிடப்பட்ட மதிப்பைக் கணக்கிடுவதற்கான அடிப்படை கணக்காய்வின் போது தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஒக்டோபர் 10 ஆம் திகதியில் ரூபா 12,956,898 பெறுமதி செலவில் கட்டுமான வேலைகள் நிறைவடைந்திருந்ததுடன் ஓமந்தையிலுள்ள கலாச்சார நிலையத்தினை 10 யூலை 2020 இல் கணக்காய்வு செய்யப்பட்ட போதிலும் அக் கட்டடமானது இதுவரை பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் கலாச்சார நிலையத்தின் காணிகள் புற்கள் வளர்ந்து காடாக காணப்பட்டிருந்தன. இதற்கமைய இக்கட்டடமானது ஒரு வருடம் ஒன்பது மாதங்களுக்கு மேலாக பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. | கட்டடம் மற்றும் காணி பயன்பாட்டிற்கு பொருத்தமானதாகவும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறக்கப்படவும் வேண்டும். | திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் பிணை வைப்பினை மேற்கொண்டு பணியினையாற்ற வேண்டிய உத்தியோகத்தர்கள் நிதி ஒழுங்கு விதி 880 (1) இற்கமைய பிணை வைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதி 880(1) இற்கமைய பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | பிணை வைப்பினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் NNP2/VN/A/K/2019/04 மற்றும் 2019 திசெம்பர் 06 ஆம் திகதிக் கணக்காய்வு ஐயவினாவிற்குமான பதில்கள் 2020 மே 13 ஆம் திகதியில் வழங்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு ஐயவினாவிற்கு உடனடியாக பதில் வழங்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இரட்டை பெரியகுளம் கிராமத்தில் அமுல்படுத்தப்பட்ட அரசு நில ஒதுக்கீடு திட்டத்தின் கீழ் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகம் 2014 ஆம் ஆண்டில் நிலமற்ற 57 பேருக்கு 80 பெர்ச் படி நிலத்தை ஒதுக்கியது மற்றும் 2019 ஆகஸ்ட் 05 ஆம் திகதியில் நிலங்கள் கணக்காய்வு செய்யப்பட்டன. ஒதுக்கீடு செய்யப்பட்டு சுமார் 5 ஆண்டுகள் கடந்த போதிலும், 57 நிலங்களில் 08 மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு குடியேறப்பட்டிருந்தன. அதன்படி, திட்டத்தின் இறுதி செயல்திறனை அடைவதற்கான முன்னேற்றம் 14 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. | திட்டத்தின் இறுதி செயல்திறனை அடைய முகாமைத்துவம் செயல்பட வேண்டும். | குடியிருப்புக்களற்ற காணியினை இனங்கண்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்வேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2011 இல் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தால் செயல்படுத்தப்பட்ட இரட்டை பெரியகுளம் வெராகாம அரச ஊழியர் வீட்டுவசதி திட்டத்தில் 113 அரச ஊழியர்களுக்கு 40 பெர்சின் படி நிலத்தை வழங்கியிருந்தது. 2019 ஆகஸ்ட் 05 ஆம் திகதியில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட போது 08 ஆண்டுகள் கடந்த போதிலும், 113 கட்ட்டங்களில் 45 கட்டங்கள் மட்டுமே குடியேற்றப்பட்டிருந்தன. அதன்படி, திட்டத்தின் முன்னேற்றம் 40 சதவீதமாக குறைவாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்து, தொடர்புடைய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு வேலையினை மேற்கொள்ள வேண்டும். | குடியிருப்புக்களற்ற காணியினை இனங்கண்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்வேன். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 84 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்தவிதமாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மிக முக்கியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவட்டச் செயலகத்திற்கு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அதிகாரம் காணப்படவில்லை. இவை தொடர்பான நடவடிக்கைகள் அமைச்சினால் மேற்கொள்ள்ப்பட வேண்டும். |